**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2023 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14–ஆம் நாள் திங்கள்கிழமை**
**I.A.07/2023 in O.S.386/2015**

மேனேஜர்,
இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்,
கங்கைகொண்டசோழபுரம். ... மனுதாரர்

//எதிர்//

**கண்ணன்** ... எதிர்மனுதாரர்

இவ்வழக்கு கடந்த 21.07.2023 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.A.P.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.மணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழக்கிடும்,

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரரால் சி.பி.சி.ஆர்டர் 8 ரூல் 9–ன் படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்படும் கூடுதல் வழக்குரையை ஏற்க அனுமதியளித்து உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி என்றும், அசல் வழக்கில் வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக போடப்பட்டிருப்பதாகவும், மேற்படி மனுதாரரின் முந்தைய வழக்கறிஞர் திரு.V.பாண்டியன் அவர்கள் இறந்துவிட்டதால், அசல் வழக்கினை தெரிந்து கொள்ள முடியவில்லை என்றும், மேற்படி இந்நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்த பிறகு தான் மேற்படி வழக்கானது விசாரணைக்காக போடப்பட்டுள்ளது என்பது தெரியும் என்றும், மேற்படி முந்தைய வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் சில வாதங்கள் குறிப்பிடப்படவில்லை என்றும், மனுதாரருக்கு வழக்கில் நல்ல கட்சி உள்ளது என்றும், இம்மனுவை

அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே தற்போதைய வழக்கறிஞர் மூலம் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டும் என்று குறிப்பிட்டு மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் கொடுத்திருக்கும் மனு சரியல்ல என்றும், அதன்படி மனுதாரருக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்காது என்றும், எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும் என்றும், மனுதாரர் மனு அபிடவிட்டில் சொல்லியிருக்கும் அனைத்தும் பொய் என்றும், வழக்கை இழுத்தடிப்பதற்காக புதிய விஷயங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

**3.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாய்மொழி சாட்சியம் கொடுக்கப்படவில்லை.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரரின் முந்தைய வழக்கறிஞர் இறந்துவிட்டாதால் மேற்படி வழக்கின் விபரம் தெரியவில்லை என்றும், மேற்படி இந்நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்த பிறகு தான் மேற்படி வழக்கானது விசாரணைக்காக போடப்பட்டுள்ளது என்பது தெரியும் என்றும், மேற்படி முந்தைய வழக்கறிஞர் எதிர்வழக்குரையில் சில வாதங்களை சேர்க்கவில்லை என்றும், மனுதாரருக்கு மனுவில் நல்ல கட்சி உள்ளது என்றும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே தற்போதைய வழக்கறிஞர் மூலம் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரர் கொடுத்திருக்கும் மனு சரியல்ல என்றும், அதன்படி மனுதாரருக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்காது என்றும், எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர

மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும் என்றும், வழக்கை இழுத்தடிப்பதற்காக புதிய விஷயங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

5. இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்துப் பார்க்கையில், மனுதாரர் மனு சங்கதியில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர் கூறியுள்ளதைப் பார்க்கும்போது அசல் வழக்கானது வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு வாதியை குறுக்குவிசாரணைக்காக உள்ளது.

**Order 8 Rule 9:–** Subsequent pleadings.– No pleading subsequent to the written statement of a defendant other than by way of defence to set off or counter–claim shall be presented except by the leave of the Court and upon such terms as the Court thinks fit, but the Court may at any time require a written statement or additional written statement from any of the parties and fix a time of not more than thirty days for presenting the same."

மேற்படி பார்க்கையில் மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு பெருத்த பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம்/–திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.